**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 144 of 2020** |
| Deposition of witness | : | **DW3** |
| | | |
| Name | : | **மகேஸ்வரன்** |
| Father Name | : | **குழந்தைசாமி** |
| Age | : | **49** |

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22.01.2026*

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். துரைசாமி கேட்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தான் சொல்லி தயார் செய்யப்பட்டவை. நான் தறி வைத்துள்ளேன். எனது முதல் விசாரணையில் அறக்கட்டளையை சேர்ந்த 10 நபர்கள் ஒன்றாக வந்தார்கள் என்று கூறியுள்ள நிலையில் அவர்கள் யாராவது எனது உறவினரா என்றால் இல்லை.

2. நான் சாட்சியாக கையொப்பம் செய்த ஆவணம் ஆனது மூன்று பேர் 10 நபர்களுக்கு விடுதலை கொடுத்த ஆவணமா என்றால் ஆமாம். நான் அந்த ஆவணத்தில் இரண்டாவது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். பத்திர அலுவலகத்தில் இன்னார் என்று நிரூபித்தவர் என்ற இடத்தில் நான் எத்தனாவதாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் முதலாவதாக கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி விடுதலை ஆவணத்தில் உள்ள பத்து நபர்களுள் யார் யார் எவ்வளவு தொகை விடுதலை கொடுத்தவர்களுக்கு தந்தனர் என்று குறிப்பிட்டு தெரியுமா என்றால் தெரியாது, மொத்தமாக ரூபாய் 24,24,600/- கொடுத்தார்கள்.

3. மேற்படி விடுதலை ஆவணத்திற்கு சாட்சியாக இருக்கும்படி துரைசாமி தான் என்னை வரச் சொன்னார் என்றால் சரிதான். விடுதலை பெற்றவர்கள் பத்திர அலுவலகத்திற்கு வந்தபோது அன்றைய தினம் சுமார் 12.30 மணி இருக்கும். நான் விடுதலை கொடுத்தவர்கள் மற்றும் அதனை பெற்றவர்கள் ஆகியோரை அன்றைய தினம்தான் முதன்முறையாக பார்த்தேனா என்றால் இல்லை, முன்பே பார்த்து உள்ளேன்.

4. செல்வரதி என்பவர் அறக்கட்டளையில் தலைவராக உள்ளார். பத்திர எழுத்தரின் பெயர் தெரியுமா என்றால் வி.சி சுப்பிரமணியம். விடுதலைக்காக கொடுத்ததாக சொல்லப்படும் தொகை பதிவாளர் அலுவலகக்கு வெளியே காம்பவுண்ட் அருகே வைத்து கொடுக்கப்பட்டது. பத்திரத்தை படித்து, தொகையை எண்ணி பார்த்துவிட்டு கையொப்பம் செய்ததற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் முக்காள் மணிநேரம் ஆகியிருக்கும். அதன் பின்பு தான் பதிவிற்காக உள்ளே சென்று தாக்கல் செய்தார்கள் என்றால் ஆமாம்.

5. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தற்போது என்னிடம் காட்டப்படும் அதே ஆவணத்தில் இன்னார் என்று நிரூபித்தவர் என்ற இடத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பமும் என்னுடையதுதான். என்னுடன் ராஜேந்திரன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார். மேற்படி ராஜேந்திரன் செல்வரதியின் கணவர் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் முதலாவதாக பாலகிருஷ்ணன், இரண்டாவதாக பிரியங்கா, மூன்றாவதாக லோகநாதன் கையொப்பம் செய்தார்.

6. 10.01.2019 அன்று மாலை 04.36 மணிக்கு ஆவணத்தை பதிவிற்காக தாக்கல் செய்ததாக துரைசாமி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, எங்களுக்கு உணவு இடைவேளைக்கு முன்பே டோக்கன் இருந்தது, ஆனால் நாங்கள் பதிவிற்கு தாக்கல் செய்த சமயத்தில் உணவு இடைவேளை என்பதால் அதன் பின்னர் மற்ற டோக்கன்கள் எல்லாம் முடித்துவிட்டு அதன் பின்புதான் பதிவாளர் எங்களது பத்திரத்தை கூப்பிட்டார். விடுதலை கொடுத்தவர்கள் எந்த சூழ்நிலையில் அங்கு வந்து கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அந்த இடத்தில் நன்றாக தான் பேசிக் கொண்டிருந்தார்கள்.

7. நான் சொல்வது போல் அன்றைய தினம் ரூபாய் 24,24,600/- கொடுக்கவில்லை என்றாலும் துரைசாமி கேட்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, நான் எனது கண்ணெதிரே பணம் கொடுத்ததையும், அதனை எண்ணி வாங்கியதையும் பார்த்தேன். எனக்கு நான் சாட்சியாக கையொப்பம் செய்த ஆவணத்தை பற்றி எதுவும் தெரியாது என்றாலும் வெறுமனே கையொப்பம் மட்டுமே செய்தேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.01.22 15:39:16 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.